# அறிவுத்தோற்றவியல் வெளிச்சத்தில் பண்டைய இலக்கியம்

# Ancient Literature in the Light of Epistemology

***முனைவர் பா. சத்யா தேவி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை

**Dr. P. Sathya Devi**
*Assistant Professor, Tamil Department*
*Thyagarajar College, Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*அறிவு என்பது மனித இனத்திற்குரிய சிறப்பான மற்றும் பொதுவான தன்மையாகும். அறிதல் அல்லது அறிந்து கொள்ளப்படுதல் என்பது அறிவின் தொடக்க நிலை. உலகில் தோன்றிய ஒவ்வொரு மனித உயிரும் செயல்கள், புலன் உணர்வுகள் மற்றும் மொழியின் வழி எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அறிய முயலுகின்றன. வாழ மேற்கொள்ளும் முயற்சிகள் பொதுமை எனினும் அவை வாழும் நிலம் மற்றும் சூழல், சமூக கட்டமைத்த பண்பாடு என்கிற ரீதியில் மாற்றம் அடையக் கூடியது. இம்மாற்றமும் அந்நிலத்தில் அவ்வச்சூழலில் வாழக்கூடிய மக்களின் சிந்தனை மற்றும் தேவையின் அடிப்படையில் அமையும்.*

***முக்கியச்சொற்கள்:*** *அறிவுத்தோற்றவியல், அறிவின் கூறுகள், நெறிமுறை அனுபவ அறிவு, மொழிக் கட்டுமானங்கள், புத்திசாலித்தனம்*

## Abstract

*Ancient literature is a great treasury of Tamil society. Through new approaches appearing in the world of literature, new light is shed on them and new views are obtained. In this way, the theory of epistemology is also worth noting here. Thinking can bring about many changes in the human world even today. It is necessary for us to think in the field of epistemology of knowledge just as we think in the field of science. The beginning of knowledge research is the knowledge of starting to search for ideas that need to be known based on the ideas that man knows. In that way, even though the ancient literature was developed based on sentiment, it cannot be denied the intelligence of the Tamil community in them. This review paper is a small attempt to explore such intelligence through epistemology.*

***Keywords:*** *Epistemology, Particular is universal, Elements of knowledge, Normative Knowledge, Empirical Knowledge, True Knowledge, Brilliance of illusion Literature.*

**Citation**

Rameshkumar, P. "Architectural Heritage and Culture of Tamils." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 4, 2023, pp. 134–138.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20096765*

*தொடக்க கால சமுகத்தில் மனித இனம் தனது வாழ்வியலைத் தகவமைத்துக் கொள்ளவும் அச்சுறுத்தும் புறச்சூழல்களில் இருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் சிந்திக்க தொடங்கிய இடமே அறிவின் தோற்றுவாய் எனக் கொள்ளலாம். மனிதனுக்கும் சிம்பன்சிக்கும் இடையில் இரண்டு விழுக்காடு மரபணு வேறுபாடுதான் விலங்கிலிருந்து மனிதனாக மாறிய பண்பு ரீதியான பாய்ச்சலைக் குறிக்கிறது இது ஒரு படைப்பாளியால் நிறைவேற்றப்படவில்லை மாறாக உடல் உழைப்பின் மூலமாக மூளையின் வளர்ச்சியால் நிறைவேற்றப்பட்டது 1 என ஆலன் வூட்ஸ் குறிப்பிடுகிறார்.*

*மனிதனை பிற உயிரிலிருந்து இருந்து பிரித்துக் காட்டக் கூடியது சிந்தித்து செயல்படக்கூடிய அறிவாற்றல் ஆகும். இத்தகைய அறிவு மனிதரிடம் எவ்வாறு தோன்றியது ? எதனால் ? ஏன் ? எப்படி ? எதற்கு ? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் வகையில் அறியப்படுவது அறிவுத்தோற்றவியல் எனக் கூறலாம்.*

*சிந்தனையில் தொடக்கத்திலேயே கோட்பாடு உருவாகவில்லை மாறாக அறியொணாக் கொள்கை எனப்படுகிற 'சம்சயவாதம்' பொருள் முதல்வாதம் மற்றும் கருத்து முதல்வாதம் இவற்றிற்கு இடையில் நிலை கொள்ள முடியாமல் தவித்த நிலையில் தோன்றியது அறிவுத்தோற்றவியல்* (Epistemology) *என்பர். இதனை தத்துவத்தின் தாய் எனவும் கூறுவர். தத்துவம் தோன்றுவதற்கு முன்பு இருந்த சிந்தனை பற்றிய ஆய்வே அறிவுத்தோற்றவியல் ஆகும்.*

*அறிவு பற்றி ஆராயக் கூடிய அறிவியல் ஆய்வு "அறிவுத்தோற்றவியல்". இது குறித்து எம்.டி. முத்துக்குமாரசுவாமி பின்வருமாறு விளக்குகிறார் அறிவு ஒழுங்கமைப்புகள் அனைத்துமே மொழிக் கட்டுமானங்கள் என்பதோடு அவை மனித மனத்தில் நனவு நிலையிலும் நனவற்ற நிலையிலும் தனித்தனியாகவோ இணைந்த செயல்படுகின்றன என்பதனையும் சேர்த்து நாம் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செயல்படுகின்ற அறிவு ஒழுங்கமைகளின் அடிப்படை நிலைப்பாடுகளைத் தொகுத்து அறிவுத்தோற்றவியல் ஆராய்ச்சி தொடங்குகிறது. 2 என்ற குறிப்பு தருகிறார். இத்தகைய அறிவு தோற்றவியலை விளக்கும் முயற்சியில் தமிழ் இலக்கிய சான்றுகளின் வழி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.*

*அறிவு தோற்றம் என்பது இடத்திற்கு இடம் துறைக்குத் துறை மனிதற்கு மனிதர் மாறுபடக்கூடியது. ஆனால் அறிவில் தோற்றம் என்பது நிலைப்படுத்தப்பட்ட அமைப்பு. புலனுணர்வு மற்றும் புறத்தில் தொடர்பு கொள்ளும் பொருளின் அடிப்படையிலும் அனுபவத்தில்*

*அடிப்படையிலும் வேறுபடக்கூடியது. விஞ்ஞான துறையில் செயல்படும் அறிவும் சட்டத்துறையில் செயல்படும் அறிவும் வேறுபட்ட வகையினது. ஆனால் அது தோன்றிய அறிவு தோற்றம் என்பது நிலைப்படுத்தப்பட்ட அமைப்பை உடையது.*

*தமிழ் இலக்கியங்களை ஆராயப் புகுமுன்பு தொல்காப்பியத்தை அடியற்றி செல்ல வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் இலக்கியத்தைக் கோட்பாடாக சொல்லும் இலக்கண நூல். உலகில் உள்ள பிற கோட்பாட்டு நூல்களுடன் ஒப்பிடுகையில் அவை ஒரே ஒரு வடிவம் பற்றி பேசும் சூழலில் தொல்காப்பியமோ இலக்கிய வகைகள் பற்றியும் அகம் புறம் பற்றியும் விவரித்தும் கூறும் நூலாக உள்ளது.*

*நிலமும் பொழுதும் உலகில் பொதுமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் அதை பண்பாட்டுப் பொதுமையாக்கி மலை, காடு, வயல், கடல், பாலை எனவும் பெரும்பொழுது எனவும் சிறுபொழுது எனவும் வகுத்தது தொல்காப்பியத்தின் அறிவுத்தோற்றவியலுக்கான சிறு எடுத்துக்காட்டாகும். மேலும் இலக்கியம் குறித்த இலக்கணங்களை விமர்சனத்தோடு முன்வைத்த நமக்கு கிடைக்கும் முதன்மையான இலக்கண நூல் என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும் என்பதை முன்னிறுத்தி சில இலக்கியச் சான்றுகளைக் காணலாம்.*

***திங்களும் திகழ்வான் ஏர்தரும்; இமிழ் நீர்ப்***
***பொங்குதிரைப் புணரியும் பாடு ஓவாதே;***
***ஒலி சிறந்து ஓதமும் பெயரும்: மலிபுனற்***
***பல்பூங் கானல் முள்இலத் தாழை***
***சோறுசொலி குடையின் கூம்புமுகை அவிழ,***
***வளிபரந்து ஊட்டும் விளிவுஇல் நாற்றமொடு***
***மையிரும் பனைமிசைப் பைதல உயவும்***
***அன்றிலும் என்புற நரலும்; அன்றி***
***விரல்கவர்ந்து உழந்த கவர்வின் நல்யாழ்***
***யாமம் உய்யாமை கின்றது***
***காமம் பெரிதே களைஞரோ இலரே! (நற்றிணை 335)***

*என்பதில் திங்களும் திகழும் வானத்தில் தோன்றுகின்றது. கடலும் பொங்கும் அலையோடு ஒலிக்கிறது. கடல் நீரும் ஒலி மிகுந்துக் கரையை உடைத்துப் புறப்படுகிறது. தாழையும், நிரம்பிய நீரையும் பல பூக்களையுடைய கடற்கரைச் சோலையில் முள்ளுடைய இலையைக் கொண்டது. சோறு எடுத்துச் சொரியும் அகப்பைப் போலக் கூம்பிய அரும்பு மலர்ந்து நறுமணத்தைக் காற்றில் வீசுகிறது. காற்று, விளிவில்லாத மணத்தோடு கரிய பெரிய பனையில் மோதுகிறது. அன்றில் பறவையானது அப்பனை மரத்தின் உச்சியிலிருந்து வருத்தத்துடன் துன்புற்று; என்பக்கத்து வந்து எலும்பு உருகக்கத்துகிறது. நல்ல யாழ், விரலால் வாசிக்கப்படுவது யாமம் வரை வாசிக்கப்படுகிறது. என் காமம், இவையாவற்றிலும் பெரிதாகிறது. என்னும் பாடலில் தனிமனித அனுபவமான தலைவனை பிரிந்து வாடும் தலைவியின் துயரை இயற்கையின் மூலங்களான கரையை உடைக்கும் கடல் பூக்களின் நிரம்பி வழியும் நீர் காற்றில் கலந்து வீசும் விளிவில்லா நறுமணம் அன்றில் பறவையின் கூவும் குரல் யாழின் ஓசை இதைவிட பெருகி வரும் தலைவியின் காமம் தலைவன் இன்றி இருப்பதால் பெரும் துயரை எதிர்கொள்ள நேர்கிறது. தனிமனித உணர்வை இயற்கை மொழியோடு கலந்து விரிகின்ற அனுபவமானது பொதுமைப் படுத்தப்பட்டு* Particular is universal *என்ற அறிவுத்தோற்றவியல் நிலைப்பாட்டினைக் கொண்டு திகழ்கிறது. அந்தரங்கத்தைச் செதுக்கி இயற்கையின் மொழியாக்கி தரும்போது அது உலக மொழியாகி விடுகிறது.*

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் கணியன் பூங்குன்றனாரின் வரிகள் உணர்த்தும் அறிவானது மனித சமூகம் உருவான இடத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. எவ்வாறு எனில் மனித இனம் தோன்றும் முன்பு பூமி இருந்த நிலை பொதுவானதாகும். பின்பு மனிதன் தோன்றி தனக்கேற்றவாறு அதை பிரித்து பெயரிட்டு அழைத்து தனி உடமையாக்கி கொண்டான். ஆனால் குன்றனாரின் வரிகள் பூமியில் மனித தோற்றம் உருவானது போது இருந்த நிலையை கருத்தில் கொண்டு எழுதப்பட்டது என்ற நோக்கு* Elements of knowledge *என்ற அறிவுத்தோற்றவியலின் மற்றொரு கூறை எடுத்து கூறுவதாக உள்ளது.*

**இன்னாது அம்ம இவ்வுலகம்**

*இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே (புறம்-164) என்னும் வரிகள் மனித சமூகம் தான் வாழ்வதற்காக கட்டமைத்த கொள்கைகளும் கோட்பாடுகளும் மற்றும் வாழ்வியல் முறைகளும் காலம் செல்ல செல்ல மனித சமூகத்தின் கழுத்தையே நெரிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. இதை உணர்ந்தே பக்குடுக்கை நன்கணியார் மனித சமூகமானது தங்களது கருத்துக்களால் உருவாக்கப்பட்ட சமூகம் எனவே அதை தனியே ஒதுக்கிவிட்டு இயற்கை அளித்த உலகை நோக்கினால் இயல்பை உணர்ந்து இனிமையான வாழ்வை வாழலாம் என்னும் கருத்தும்* Normative Knowledge *என்பதைக் குறிக்கும் அறிவுத்தோற்றவியலின் மற்றொரு கூறாகும். உலகில் நடைபெறும் நிகழ்வுகளை சரி அல்லது தவறு என மதிப்பீடு செய்வது மதிப்பீட்டறிவாகும்.*

*அறிவியல் துறையில் நாம் சிந்திப்பது போலவே அறிவு தோற்றவியல் துறையிலும் நாம் இயக்கவியல் முறையில் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்னும் அறிவே அறிவு ஆராய்ச்சியில் தொடக்கமாக அமைகிறது. சான்றாக*

***நிலம் தொட்டு புகாஅர் வானம் ஏரார்***
***விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்***
***நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்***
***குடிமுறை குடிமுறை தேரின்***
***கெடுநரும் உளரோ நம் காதலோரே (கு.தொ:130)***

*இங்கு தனது தலைவனை காணாத தலைவி உலகின் இயல்பையும் தனது தேடலையும் ஒருங்கே இணைத்து கூறுகிறாள்.*

*சங்ககால வாழ்வில் மனிதன் சட்டென பயணம் செய்து ஒரு இடத்தை கடந்து செல்ல இயலாது என்பது அன்றைய வாழ்வியலின் நிலை அதையே பாடலில் கூறும் வேளை நிலத்தைத் தோண்டி அதனுள் புகமாட்டார்; வானத்தில் ஏறமாட்டார்,குறுக்கிடும் பெரிய கடலில் காலால் நடந்து செல்லார்; நாடுகள்தோறும், ஊர்கள்தோறும் குடிமுறைகள் தோறும் தேடிப்பார்த்தால் காணாமற் போவாரோ நம் காதலர். எனக் கூறுகிறாள். அன்றைய உலக இயல்பு* (Fact) *மற்றும் அனுபவ அறிவின் அடிப்படையில்* (Empirical Knowledge) *உணர்வு கலந்து கூறப்பட்டுள்ளது.*

*மேற்கண்டவாறு பண்டைய இலக்கியத்தின் ஒவ்வொரு பாடலும் அறிவுத்தோற்றவியலை உணர்வு கலந்து வெளிப்படுத்தியுள்ளமையைக் கூர்ந்து ஆராயும் பொழுது அறிய இயலுகிறது. வான்புகழ் கொண்ட வள்ளுவர் இயற்றிய திருக்குறளிலும் அறிவு தோற்றவியலுக்கான கூறுகள் நிறைந்து காணக் கிடைக்கின்றன.*

***எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள்:423)***

*எனும் குறள் பொருட்பாலில் அரசியல் எனும் பிரிவின் கீழ் அறிவுடைமை எனும் அதிகாரத்தில் இடம் பெற்றதாகும். ஓர் அரசன் நீதி வழங்கும் பொழுதும் ஆட்சி புரியும் வேளையும் பிறர் கூறும் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதை இக்குறள் சுட்டி நிற்கிறது.*

*எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள்:355)*

*இக்குறள் அறத்துப்பாலில் துறவறவியல் எனும் பிரிவின் கீழ் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் உள்ள குறளாகும். துறவு மேற்கொண்ட ஒரு மனிதர் எந்த பொருளை கண்டாலும் அதை கண்களால் காண்பதன் வழி அதன் தன்மையை முடிவு செய்யாது அப்பொருளின் உண்மை தன்மையை உணர்வதே மெய்யான அறிவு எனக் கூறுகிறார்.*

*மேற்கண்ட குறட்பாக்களில் உண்மையான அறிவை* (True Knowledge) *கண்டறிவது அறிவு எனக் குறிப்பிடும் வள்ளுவர் அது துறை சார்ந்து மாறுபடும் தன்மையினைத் தெளிவாக விளக்கியுள்ளார்.*

*யார் யார் வாய் கேட்பினும் என்பதில் உள்ளுணர்வு* (Intuition) *கொண்டு செயல்படும் அறிவு தோற்றவியலின் ஒரு கூறையும் எத்தன்மை தாயினும் என்பதில் உள்ளொளி* (Brilliance of illusion) *கொண்டு செயல்படும் மற்றொரு கூறையும் கண்டறிய முடிகிறது.*

*இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் பல பாடல்களில் அறிவுத்தோற்றவியலின் கூறுகள் காணக் கிடைக்கின்றன.அதனைக் கண்டறிந்து அறிவுத்தோற்றவியல் வெளிச்சத்தில் ஆராயும் பொழுது தமிழரின் அறிவார்ந்த வெளி புலப்படும் என்பதும் அவை நவீன வாழ்வியலின் சிக்கலில் இருந்துமனிதனைமீட்டெடுக்ககூடியதாகஅமையும்என்பதும்மறுக்கவியலாதஉண்மையாகும்.*

**அடிகுறிப்பு**

1. *ஆலன் உட்ஸ் - ப.எ-11 - தத்துவத்தின் வரலாறு*
2. http://mdmuthukumaraswamy.blogspot.com/2014/12/blog&post5.html

**துணை நின்ற நூல்**


1. *மார்க்சிய அறிவுத் தோற்றவியல் - நா. வானமாமலை.*
2. *தமிழர் அறிவு கோட்பாடு - பேராசிரியர் கா. நாராயணன்.*
3. *தத்துவத்தின் வரலாறு - ஆலன் உட்ஸ்.*
4. *அறிவு பற்றிய தமிழரின் அறிவு - சி.மகேந்திரன்.*
5. http://mdmuthukumaraswamy.blogspot.com/2014/12/blog & post5.html.